Regd. No. M 3473

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரத் தமிழ் பத்திரிகை)
ராஜா அண்ணமலைபுரம், மதராஸ்-28

"முயற்சி திருவினையாக்கும்"

தொகுதி 30	குரோதி-விசுவாவசுஹு பங்குனி – சித்திரை 1965 ஏப்ரல்	பகுதி 1

பத்திரிகாசிரியர் குழுவின் அங்கத்தினர்

1. திருவாளர் A. K. ஸீதாராமன், B.A., L.T., (ஆசிரியர்)
2. ,, T. S. ராஜகோபாலன், B.A., L.T., (வெளியிடுவோர்)
3. ,, L. மரியப்பிரகாசம், B.A., L.T., J.P.
4. ,, C. ரங்கநாத அய்யங்கார், M.A., L.T., (பத்திரிகைக் காரியதரிசி
5. ,, P. V. ராமஸ்வாமி, B.A., L.T., (பத்திரிகைக் கூட்டுக் காரியதரிசி
6. ,, V. பூவராகமூர்த்திராவ், B.A.,L.T., (பத்திரிகைக் கூட்டுக் காரியதரிசி
7. ,, V. S. சரவணன்
8. ,, P. ராமச்சந்திரன்
9. ,, G. ஸ்ரீனிவாசாச்சாரி
10. ,, M. P. சுப்பிரமணியம்
11. ,, M. S. அருள்சாமி

உள்நாடு :—ஆண்டு சந்தா ரூ. 3-00] [தனிப் பிரதி 25 ந. பை.

பொருளடக்கம்

1.	தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மனு	....	1
2.	55-வது கல்வி மாநாடு	....	2
3.	பாராட்டு	....	3
4.	பெய்யென மழை பெய்யுமா ?	...	4
5.	உலகமளாவிய வானிலை அறிவிப்பு	...	6
6.	அனைவருக்கும் கல்வி	...	7
8.	டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்	...	8
9.	எகோ ECHO	....	11

Printed by S. Venkataraman, at The Hind Press Private Ltd.
113, R. K. Math Road, Madras-28. Published by
Sri T. S. Rajagopalan, B.A., L.T., for the S. I. T. U. at Raja
Annamalaipuram, Madras-28.
Editor : Sri A. K. Sitharaman, B.A., L.T.,

பாலர் கல்வி

தொகுதி 30	குரோதி-விசுவாவசுஸு பங்குனி – சித்திரை 1965 ஏப்ரல்	பகுதி 1

தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மனு

தென் இந்திய ஆசிரியர் சங்கமும் அதன் கிளைத் தாபனங்களும் சேர்ந்து, இக் காலத்துக் கல்வி நிலையையும் செய்யவேண்டிய சீர்த்திருத்தங்களையும் செவ்வனே ஆய்ந்து, ஐந்து அதிகாரங்கள் கொண்ட ஒரு மனுவாகத் தயார்செய்துள்ளன. கல்வி சம்பந்தமான திட்டக் குழுவினர் இங்கு வரும்போது, அவர்களிடம் எடுத்துக் கூறுவதற்கு இது மிகப் பயன்பெறும். இம்மனு முழுதும் South Indian Teacher இல் இம்மாதத்திய மலரில் வெளியிடப் பெற்றுள்ளது. இம் மாநிலத்திலுள்ள ஆசிரியர்களும் யாவரும் இதனைப் படித்து, இதில் செய்யவேண்டிய திருத்தங்களையும் மாறுபாடுகளையும் அறிவிக்கவேண்டும் என்ற நோக்குடன் இப்பணியில் யாங்கள் ஈடுபட்டுள்ளோம்.

9-1-1965இல் இது பற்றிக் கூட்டிய பேரவையிலே உயர்திரு K. பாலசுப்பிரமணியய்யர், B.A., B L., M.L.C., (பத்மபூஷணம்) அவர்கள் இந்த ஆய்வுக் குழுவின் தலைவராகப் பணியாற்றப் பெருமனத்துடன் முன்வந்து, இக்குழு கூடிய கூட்டங்களில் தவறுமல் கலந்து கொண்டு, நமது அரிய கருத்துக்களை வெளியிட்டு, இந்த மனுவை வெளியிட ஊக்குவித்தற்காக முதன் முதலிலேயே இவருக்கு தமது நன்றி உரித்தாகும். இந்நகரிலுள்ள கல்வித் தாபனங்கள், கல்லூரிகள் இவற்றுள் பணியாற்றும் பெரியோர்களும் முழு மனத்துடன் எங்களுடன் ஒத்துழைத்ததால், நாம் வெளியிட்டுள்ள மனு, பெரிதும் பாராட்டப்படுகின்றது.

முதல் அதிகாரத்தில் சென்னை மாநிலத்தில் தற்காலக் கல்வி அமைப்பும், கல்விக்காக ஆகும் காலமும், வெவ்வேறுன நிலைகளும் விவரம் பெற்றுள்ளன. இவ்வாறுன நிலையில் நாம் காணுங் குறைபாடுகள் இரண்டாவது அதிகாரத்தில் வரையப்பெற்றுள்ளன. கல்வியைப் பற்றிய சீர்திருத்தம் செய்யும்போது கவனிக்க வேண்டுவன யாவை—பாட திட்டம், தொழிற்கல்வி, ஆசிரியர் பயிற்சி, பெண் கல்வி, ஆசிரியர் நலன் இவை போன்ற விஷயங்கள் மூன்றும் அதிகாரத்தில் உள்ளன. ஆசிரியர்களது நிலையும், ஆசிரியர்களது தாபனங்களைப் பற்றிய விவரங்களும் நான்காவது அதிகாரத்தில் வந்துள்ளன. கடைசி அதிகாரத்தில் செய்யவேண்டுவன யாவை என்பன 90 பத்திகளிற் குறிக்கப் பெற்றுள்ளன. ஆசிரியர்களுக்கு ஊதியம், இவர்

கள் பெறவேண்டிய பயிற்சி, இவர்களது நலனுக்காக உடனடியாகச் செய்ய வேண்டுவன இவை நன்கு எடுத்துக் கூறப் பெற்றுள்ளன, இவ்வதிகாரத்தில்.

ஆசிரியர்களது அருந்தொண்டை ஆராய்ந்தால், இவர்களுக்கு அளிக்கும் ஊதியத்தை ஏனைத் துறைகளில் பணியாற்றுபவர்களின் ஊதியத்திற்கு ஒப்பாகக் கொள்ளல் கூடாது, துவக்கத்தில் ஊதியம் மற்றைத் துறைகளைவிட அதிகமாக இருக்கவேண்டும், ஆசிரியர் தமது ஆற்றலைப் பெருக்கிக்கொள்ள வாய்ப்பு வேண்டும். இந்த ஆற்றலுக்கேற்ப அவ்வப்போது ஊதியம் நிர்ணயம் செய்யவேண்டும். இதை நிர்ணயம் செய்வது பக்ஷபாதமற்ற பெரியோர்கள் கொண்ட ஒரு குழுவின் பொறுப்பாக வேண்டும், மருத்துவ வசதி, வீட்டுவசதி இவைபோன்ற வசதிகள் வேண்டும்—இவைபோல்வன நன்கு ஆராயப் பெற்று வரையப்பெற்றுள்ளன ஐந்தாவது அதிகாரத்தில் பணியிலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்குச் செய்ய வேண்டுவன ஆயுள் ரக்ஷணத்திற்கு வாய்ப்பு, பணிப்பரிசு (gratuity), ஓய்வுக்கால ஊதியம் (pension) என்பன. சராசரியாக மாதம் ரூ. 100 ஊதியம் பெறும் ஆசிரியர் மாதம் ரூ. 8 வீதம் அளித்து, இதோ ரூ. 8 பள்ளி நிருவாகிகள் அளித்தால் இத்தொகை 5% கூட்டு வட்டிக் கணக்கில் 25 ஆண்டில் ரூ. 10,000 ஆகும், 30 ஆண்டில் ரூ. 15,000 ஆகும். இதைக் கொண்டு ஆயுள் ரக்ஷணத்திற்கு ரூ. 5,000 பயன்படுவதுடன், 50 மாதச் சம்பளம் gratuity, ஆகவும், சம்பளத்தில் 50% ஓய்வுக்கால ஊதியமாகவும் அளிக்க வசதியுண்டு என்று கணக்கிடப் பெற்றுள்ளது.

ஆசிரியர்கள் முழு மனத்துடன் பணியாற்றினால்தான் கல்வி நல்ல வகையிலே பெருகும். ஆசிரியர்களுக்குச் செய்ய வேண்டுவன, ஊதியத்துடன் நல்ல வசதிகளாகும். இவற்றையும் எடுத்துக் கூறுகின்றது இம்மனு.

55வது கல்வி மாநாடு

இந்த ஆண்டுக் கல்வி மாநாடு காரைக்குடியில் நடைபெறுகிறது. அண்மையிலே நிகழ்ந்த கிளர்ச்சிகளாலே, பரீட்சைகள் மே மாதம் நிகழ்வதால், மாநாடு வழக்கம்போல் மே மாதம் மூன்றுவது வாரத்தில் நிகழ்வது சாத்தியமன்று; ஆதலால் மேமாதம் முடிவிலோ அல்லது ஜூன் மாதம் துவக்கத்திலோ நடைபெறும், கல்வி சம்பந்தமாகவும் ஆசிரியர்களது ஊதியம், நிலை, நலம் சம்பந்தமாகவும் விஷயங்கள் ஆராய இவை வேண்டியிருப்பதால், ஆசிரியர்கள் யாவரும் மாநாட்டிற்கு விஜயம் செய்து, தங்களது கருத்துக்களை வெளியிட்டு, மாநாட்டைப் பயனுறச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம். மாநாட்டைப் பற்றிய விவரங்கள் விரைவிலேயே வெளியிடப் பெறும். வழக்கம்போல் துவக்க நிலை, உயர்நிலை, கல்லூரி நிலை, தொழிற் கல்வி, பெண்கள் கல்வி இவை நன்கு ஆராயப்பெறும்; ஆதலின் ஆசிரியர்கள் யாவரும் துவக்க நிலை முதல் கல்லூரி நிலை ஈருக-பங்கு கொள்ள வேண்டும் மாநாட்டிலே என்பது எங்களது வேண்டுகோள்.

பாராட்டு

தர்மரக்ஷாமணி K. பாலசுப்பிரமணி ஐய்யர், B.A., B.L., M.L.C. அவர்களுக்கு மத்திய அரசினர் பத்மபூஷண் என்ற விருதினை அளித்துள்ளது யாவரும அறிவர். இதற்கான பாராட்டுக் கூட்டம் ஒன்று 9-4-65 இல் தென் இந்திய ஆசிரியர் சங்க அலுவலகத்தில் கூடியது. ஆசிரியர்களும் பொதுமக்களும் ஐயரவர்கள் ஆற்றி வரும் அரும் பணியைப் போற்றினர். சட்டசபையிலும் கல்வித் துறையிலும் மத விஷயத்திலும் பொதுப்பணியிலும் அவர் கொண்டுள்ள ஊக்கம் வரையில்லாததென்றும், ஆசிரியர்களது நலனுக்காக அவ்வப் போது நன்கு பாடுபட்டு ஆசிரியர்களது நிலையை உயர்த்தி வருகிறார் என்றும் எடுத்துக் கூறினர் ஆசிரியப் பெருமக்கள். தென் இந்திய ஆசிரியர் சங்கமும் இத்துடன் இணைத்துள்ள கிளைச் சங்கங்களும் சேர்ந்து இயக்கி வரும் ஆய்வுக் குழுவில் இவர் தலைமையேற்று, இக்குழுவினர் தயாரித்த மனுவினைக் குறையற வெளியிட ஊக்குவித்ததற்காக நமது பணிவையும் அன்பையும் நன்றியையும் வெளியிட்டு, இப்பெருமான் பல்லாண்டு பல்லாண்டாகப் பொதுப்பணி செய்து உலகை வாழ்வித்துத் தாமும் களிக்க வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பெய்யென மழை பெய்யுமா?

''வானிலையைப் பற்றி எல்லோரும் தான் பேசுகிறார்கள்; ஆனால் யாரும் அதைப் பற்றி ஒன்றும் செய்வதில்லை.''

நூறு ஆண்டுகளுக்கு முன்னால் மார்க் டுவெயின் இவ்வாறு கூறினார். நகைச்சுவைக்குப் பெயர்போன அமெரிக்கர் அவர். ஆனால் அவர் காலத்திற்குப் பின் வானிலை பற்றி எவ்வளவோ செய்யப் பட்டிருக்கிறது. 'வானிலையை முன்கூட்டிச் சொல்வதுமட்டுமா; விருப்பப்படி அதை ஆட்டி வைக்கவும் முடிகிறது.

செயற்கைக் கோள்

யு. எஸ். டைரோஸ், நிம்பஸ் செயற்கைக் கோள்களின் உதவியுடன் உலகம் நெடுகிலும் வானிலையை முன்கூட்டி அறிவிப்பதில் மாபெரும் முன்னேற்றம் காணப்பபட்டிருக்கிறது. செயற்கைக் கோள்கள் அனுப்பும் தகவல்களைக் கொண்டு கணக்கிடும் இயந்திரங்கள் உலகில் எந்த இடத்துக்கும் வானிலையை முன்கூட்டியே உடனே அறிவிக்கும் நாளை யு. எஸ். விஞ்ஞானிகள் எதிர் பார்க்கின்றனர்.

உலகமளாவிய வானிலையை முன்னறிவிப்பு அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு முதல் நடவடிக்கை இவ்வாண்டு ஜனவரி 1ம் தேதி எடுத்துக் கொள்ளப் பட்டது. அன்று அமெரிக்கா வாஷிங்டன் நகரில் உலகமளாவிய வானிலை நிலையம் ஒன்றைத் திறந்தது. உலகில் மக்கள் வாழும் பகுதிகளுக்கு வானிலை முன்னறிவிப்புத் தகவல்களைத் தயா

ரித்து விநியோகம் செய்ய இந்த நிலையம் தொடங்கப் பெற்றது.

இந்தத் திட்டத்தின்படி இன்னும் இரண்டு நிலையங்கள் திறக்கப்படும். ஒன்று ஆஸ்திரேலியாவில் மெல்போர்னிலும், மற்றது சோவியத் யூனியனில் மாஸ்கோவிலும் அமைக்கப்படும். இவ்விரண்டு நிலையங்களில் அமைக்கப்படும் மின் அணுக் கருவிகள் வானிலைத் தகவல்களைப் பெற்று, ஆராய்ந்து, பிரித்து, அஞ்சல் செய்யும்.

இம் மூன்று நிலையங்களும் செயல்படத் தொடங்கியதும் உலகம் நெடுகிலும் அன்றாட வானிலை முழுவதையும் அறியும் வாய்ப்பு ஏற்படும். வானிலை முன்னறிவிப்புக்கள் இன்னும் துல்லியமாக இருப்பதுடன், அதிக நாள் முன் கூட்டியே இருக்கும் வாய்ப்பும் கிட்டும்.

இதுவரை வாயு மண்டலத்தின் மேல் பாகத்தைப் பற்றித் தகவல் பெறுவதற்கு வகை செய்து வந்தவை பல பலூன்களாகும். பெருங் கடல்களுக்கு மேலாகவும் மக்கள் வாழாத பிரதேசங்களுக்கு மேலாகவும் பலூன்களை அனுப்புவது பொருளியல் துறையில் பார்க்கையில் சாத்தியமில்லை என்று கண்டு கொள்ளப் பட்டது.

டைரோஸ், நிம்ப்ஸ், செயற்கைக் கோள்கள் வந்ததிலிருந்து உலக மளாவிய வானிலை கண்காணிப்பு முதன் முதலாகச் சாத்தியமாகி வருகிறது, உண்மையில் இக் கோள்கள் வானியல் துறையில் வரலாற்றை உண்டுபண்ணியுள்ளன. வானிலை கணிப்பில் புது யுகம் ஒன்றைத் தோற்றுவித்துள்ளன இக் கோள்கள்.

அண்மையில் இந்தியா உள்ளிட்டு பல நாடுகள் செலவு அதிகமில்லாத தரை நிலையங்கள் பலவற்றை அமைத்து வந்துள்ளன. யு. எஸ். வானிலைக் கோள்களிலிருந்து நேரடியாக இந்த நாடுகளுக்கு மேலாக இருக்கும் மேக முடாக்குப் படங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன, இவை யனைத்தும் பயன்படக் கூடியவை இப்படங்களில் சிலவற்றை பம்பாய் வானிலை ஆய்வு நிலையம் பெற்றுள்ளது. இப்படங்கள் உலகம் நெடுகிலும் விநியோகிக்கப்பட்டு, நீண்ட கால வானிலை முன்னறிவிப்புக்கும், உருவாகும் புயல்களை முன் கூட்டி கண்டுகொள்வதற்கும் வானியல் நிபுணர்களுக்கு வகை செய்துள்ளன.

குறைபாடு

டைரோஸ், நிம்ப்ஸ் கோள்கள் தந்த மேக முடாக்குப் படங்கள் குறிப்பிடத்தக்க வகையில் செம்மையாக இருந்தாலும், வானிலை முன்னறிவிப்புக்கு மிக அவசியமான மற்ற தகவலைச் சேகரிக்க இச் செயற்கைக் கோள்களினால் முடியவில்லை. வாயு மண்டல அழுத்தம், காற்றின் வேகம், திசை, வாயு மண்டலத்தின் வெப்பம் ஈரம் முதலிய தகவல்களை தரையில் இருக்கும் வானிலை நிலையங்கள் சேகரிக்கின்றன.

வாயு மண்டலத்தை வர்ணிப்பது ஒன்று; எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்று முன்கூட்டிச் சொல்வது மற்றொன்று. இப்பொழுது என்ன இருக்கிறது என்பதை செயற்கைக் கோள் கூறுகிறது. 12 மணி நேரம் கழித்து மேகங்கள் எங்கு இருக்கும் என்று அது சொல்வதில்லை. எனவே கிடைத்தத் தகவல்களைச் செம்மையாகப் பயன்படுத்த வழிகள் காணுவதற்கு ஏராளமான ஆராய்ச்சி தேவை.

கொளராடோ மாநிலத்தில் போல்டரில் இருக்கும் வாயு மண்டல ஆராய்ச்சிக்கான தேசிய நிலையம், (என். ஸி. ஏ. ஆர்.) இதைத்தான் செய்யவிருக்கிறது. உலகிலேயே இதுதான் மிகப் பெரிய அடிப்படை வானிலை ஆராய்ச்சிக் கூடமாக இருக்கக் கூடும்.

இவ்வாய்வுக் கூடத்தில் முயற்சி மிகக் கடினமானதாக இருக்கும். ஏனெனில் ஓரிடத்திலுள்ள வானிலையமைப்பு பல்லாயிர மைல்களுக்கப்பால், துளிக்கூடச் சம்பந்தமில்லாமல் போல தோன்றும் பௌதிக, ரசாயன நிகழ்வுகளால் ஏற்படக் கூடும்.

என். ஸி. ஏ. ஆர். தனது இலட்சியத்தையடைய, பௌதிக நிபுணர்கள், இரசாயன நிபுணர்கள், கணித நிபுணர்கள் வானியல் நிபுணர்கள் ஆகிய பல துறையில் இருக்கும் உயர்தர நிபுணர்களை ஒன்று சேர்ததுள்ளது, வாயு மண்டலத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் ஆராய.

காற்றோட்டம், வாயுமண்டலமும் கீழேயுள்ள பெருங்கடல்கள் நிலப் பரப்பும் ஒன்றையொன்று எப்படி பாதிக்கிறது, பூமியின் மேல் பரப்பில் வானிலையை காஸ்மிக் நிகழ்வுகள் எப்படி பாதிக்கின்றன முதலிய பிரச்னைகளை விஞ்ஞானிகள் ஆராய்வர். துண்டு துண்டாகக் கிட்டும் இந்த ஆராய்ச்சி முடிவுகளை எல்லாம் ஒன்று சேர்த்து, பருவ நிலைகள் எப்படி ஏற்படுகின்றன என்பதை விளக்கும் ஒரு பொது கோட்பாட்டை உருவாக்க முடியும் என்று என். வி. ஏ. ஆர். நம்புகிறது. இந்தப் பணியின் முடிவு நடைமுறையில் பலன் தரக் கூடியதாக இருக்கும். ஆறு மாதம் முன் கூட்டி வானிலை முன்னறிவிப்பு சாத்தியமாகக் கூடும்.

இவ்வாறு மிக முன் கூட்டி வானிலையை அறிவிப்பதனால் பொருளியல் துறையில் ஏற்படும் நல்ல விளைவுகள் மிகப் பிரமாதமாக இருக்கும். எடுத்துக் காட்டாக; ஐந்து நாட்கள் முன்கூட்டியே துல்லியமாக வானிலை அறிவிப்பு

செய்வதனால் அமெரிக்காவில் மட்டும் வேளான்மையில் 300 கோடி டாலரும் சில்லறை வனிகத்தில் 7½ கோடி டாலரும், மரத் தொழிலில் 4½ கோடி டாலரும் மிச்சமாகும் என்று நாஸா மதிப்பிட்டுள்ளது.

வானிலைக் கட்டுப்பாடு, அல்லது வானிலையைத் திருத்துவது பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்வதிலும் அமெரிக்கா ஈடுபட்டிருக்கிறது. எடுத்துக் காட்டாக சில வெப்ப நிலைகளில் மூடு பனியையும் தாழ்வான மேகங்களையும் சிதறச் செய்வது சாத்தியமே என இப்பொழுது கண்டு கொள்ளப்பட்டிருக்கிறது. ஆலங்கட்டி மழை ஏற்படாமல் தடுக்கலாம். மேகங்களை செயற்கை முறையில் மழை பெய்விக்கலாம். அதன் மூலம் நீர்வளத்தைப் பெருக்கலாம். புயல் காற்றுகளை திசை மாறிச் செல்லச் செய்தல், கடும் புயல் காற்றுகளின் உக்கிரத்தைத் தனித்தல், இனனும் பல காரியங்களைச் சாதிக்க முடியும்.

சிறிய அளவிலும்கூட வானிலையை மாற்றுவதில் வெற்றி கண்டால் அது உலகுக்குப் பெரும் பயன் தரும் என்பதில் ஐயமில்லை. உலக மக்களில் முக்கால்வாசிப் பேர்கள் மொத்த நிலப் பரப்பில் கால் பங்குக்கும் குறைவாகவுள்ள நிலப் பரப்பில்தான் வாழ்கின்றனர். மற்றப் பிரதேசங்கள், வசிக்க முடியாதபடி வெப்ப மிகுதியாகவோ, குளிர் மிகுதியாகவோ ஈரம் மிகுதியாகவோ வரட்சி மிகுதியாகவோ இருக்கின்றன.

உலகமளாவிய வானிலை அறிவிப்பு

யு. எஸ். முயற்சியில் பெரும் வெற்றி

உலகில் எந்த இடத்துக்கும் இரண்டு வாரங்கள் முன்கூட்டி வானிலையை அறிவிக்கும் ஆற்றலை அமெரிக்கா மிக விரைவில் அடையவிருக்கிறது. செயற்கைக் கோளும் கணக்கிடும் கருவியும் இணைக்கப்பெற்றுள்ள வானிலை ஆய்வு முறை வானியலில் ஒரு முக்கிய முன்னேற்றத்தைக் குறிப்பிடுகிறது என்று நாஸா என்ற தேசிய விமான இயல் விண்வெளி நிர்வாகத்தின் துணை நிர்வாக அதிகாரி டாக்டர் ஹியூ டிரைடன் கூறுகிறார்.

முதலாவது யு. எஸ். வானிலை செயற்கைக் கோள் டைரோஸ்-1 விண்வெளியில் செலுத்தப்பட்டு ஐந்தாண்டு நிறைவு நினைவாக வியாழக்கிழமையன்று நிகழ்ந்திய ஒரு பேச்சில் மேலே கூறப்பட்ட முன்னேற்ற முறையை டிரைடன் விளக்கினார்.

வானியல் நிபுணர்கள் அண்மையில் செய்த ஆராய்ச்சிகளின் பயனாக, இன்னொரு மாபெரும் வெற்றியை நாம் அணுகிக் கொண்டிருக்கிறோம் என்பது தெளிவாகத் தெரிகிறது; இரண்டு வாரங்கள் முன் கூட்டியே வானிலையை அறிவிக்கும் ஆற்றல்தான் இந்த வெற்றி என்றார் அவர். வாயு மண்டலங்களை ஆராயும் வானிலை பலூன்கள், ஏற்கெனவே தரையிலும் கடலிலும் அமைக்கப்பட்டுள்ள கருவிகள் முதலியன செயற்கைக் கோள்கள், வேகமாகப் பணியாற்றும் கணக்கிடும் கருவிகள் ஆகியவற்றுடன் சேர்ந்து அடுத்த சில ஆண்டுகளுக்குள் உலக வியாபகமான கண்காணிப்பு முறை ஒன்றை அமைப்பதைச் சாத்தியமாக்கும்

டைரோஸ் செயற்கைக் கோள்கள் மேக மூடாக்குகளைப் படம் எடுக்கின்றன. அவற்றின் கண்டுபிடிப்புகள், தரையிலோ பலூன்களினாலோ எடுக்கப்பட்ட காற்று, வெப்பம், அழுத்தம் ஆகியவற்றின் அளவைகளுடன் இணைக்கப்பட்டு, வானிலை முன்னறிவிப்புப் படம் தயாரிக்கப்படுகிறது.

தற்பொழுது செய்யப்படும் நீண்டகால வானிலை முன்னறிவிப்புகள் துல்லியமாக இல்லை. இதற்குக் காரணம் பெருங்கடல்கள் (உலகப் பரப்பில் ஐந்தில் நான்கு பங்கு கடல்கள்தான்) துருவப் பிரதேசங்கள் ஆகியவற்றில் மிகக் குறைவான ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

புதிய முறையின் கீழ், பெருங்கடல்களிலும் துருவப் பிரதேசங்களிலும் தானே இயங்கும் வானிலை நிலையங்கள் ஏராளமாக அமைக்கப்பட்டிருக்கும். மேலே மிக வேகமாகச் சுற்றி வரும் செயற்கைக் கோள்கள் இவற்றிலிருந்தும் தரையிலுள்ள நிலையங்களிலிருந்தும் தகவல்களைப் பெற்று, மேக மூடாக்கு பற்றிய தகவல்களுடன் இணைத்து பூமியில் இருக்கும் கணக்கிடும் நிலையங்களுக்கு அஞ்சல் செய்யும். இந்த நிலையங்கள் முன்னறிவிப்பு அறிக்கைகளை வெளியிடும்.

சென்ற ஐந்தாண்டுகளில் அமெரிக்கா 9 டைரோஸ் செயற்கைக் கோள்களை

விண்வெளியில் செலுத்தியுள்ளது. இக் கோள்கள் ஐந்து லட்சம் மேக முடாக்குப் படங்களைத் தந்துள்ளன. டைரோஸ் 7,8, 9 இன்னும் பணியாற்றி வருகின்றன.

இந்த ஆண்டுகளில் 2100-க்கு மேற் பட்ட புயல் அறிவிப்புக்களை 50 நாடு களுக்கு யு. எஸ். வானிலை நிலையம், செயற்கை கோள் கண்காணிப்பின் விளைவாக வழங்கியுள்ளது. 1C5 புயல்காற் றுகள், பேய்க்காற்றுகள், வெப்பமண்டல புயல்கள் முதலியவற்றை செயற்கைக் கோள் கண்டுபிடித்தது. இவற்றில் 50 புயல் காற்றுகளை வழக்கான முறை களால் கண்டுபிடிப்பதற்கு முன்பேயே செயற்கைக் கோளகள் கண்டுபிடித்து விட்டன.

S. ரத்னம், M.A., B.T.
துணைப்பேராசிரியர்
அரசினர் பயிற்சிக் கல்லூரி,
குமரபாளையம்

I

மாணவன்:

பாடம் பயில ஆர்வத்தோடே
நாடி உம்மை நானும் வந்தேன் ;
ஏடு கூறும் எண்ணமெல்லாம்
தேடி வெல்ல ஓடி வந்தேன்.
தேவையான பூவைத் தருவேன்;
ஏவல் ஏற்றே தேவை தீர்ப்பேன் ;
பாவம் இல்லா பணியைப் புரிவேன்:
சேவை செய்தே பாடம் கற்பேன்.
செல்வம் என்பால் சிறிதும் இல்லை ;
செலவு செய்யச் சேர்த்ததில்லை,
கல்வி கற்கக் காசும் இல்லை,
அல்லல் நீக்கி அருளவேண்டும்.

ஆசிரியர் :

காசும் இன்றேல் கவலை இல்லை,
காசுக் காகக் கல்வி இல்லை,
காசில்லாமல் கல்வி தன்னை
மாசில் மனத்தால் அளிப்பேன்யானே

II

1\. பள்ளி சென்ற பாலகனே
படித்து வந்த மாணவனே
கள்ளம் உள்ளே இல்லாதே
கற்ற தென்ன சொல்வாயே.

2\. வாழ்வுக் குள்ளே சென்றிடவே
வாழ்வாங் கிங்கே வாழ்ந்திடவே
தாழ்வில்லாமல் வென்றிடனே
தக்க கல்வி கற்றேனே.

3\. பாரில் சேவை செய்திடவே
பயிற்சி நன்குய்ப் பெற்றேனே
ஊரின் தேவை அறிந்தேனே
உணர்ச்சி யோடு உழைப்பேனே.

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

டாக்டர் கரியமாணிக்கம் சீனிவாச கிருஷ்ணன் இற்றைக்கு அறுபத்தாறு ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிப்புத்தூர் என்ற புண்ணியத்தலத்தின் அருகில் உள்ள வாதிராப் என்ற சிற்றூரில் பிறந்தார். அவர் சிறிய வயதிலேயே தமிழிலும் சமஸ்கிருதத்திலும் உள்ள சமய, தத்துவ இலக்கியங்களைக் கற்று அறிந்தார். அவரது தொடக்கக் கல்வி வாதிராப்பிலும் பின் ஸ்ரீவில்லிப்புத் தூரிலும் நடைபெற்றது. அவர் நாலாம் பாரத்தில் படிக்கும்போது மாணவரைச் செய்முறைப் பயிற்சியில் பழக்குவித்த ஏ. சுப்பிரமணிய ஐயரும், தமிழிலும் விஞ்ஞானத்திலும் புலமைபெற்ற திரு மலைக்கொழுந்துப் பிள்ளையும் அவருக்கு விஞ்ஞானச் சுவை ஊட்டிய முதல் ஆசிரியர் ஆவர். அடுத்த ஆண்டில் அவர் நிக்கல்ஸன் ஹைடிராமீட்டரின் தத்துவத்தைத் தாமாகவே கண்டுபிடித் துப் பின் அது முன்னரே கண்டுபிடிக்கப் பட்டதென்று அறிந்தார். மெட்ரிக் குலேஷன் தேறியபின் மதுரை அமெரிக் கன் கல்லூரியில் படித்தார். அவருடைய பட்டப் படிப்பு சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் நிறைவேறியது.

படிப்பு முடிந்ததும் அவர் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் செயல்முறை ஆசிரியராகப் (demonstrator) பணியாற் றினர். அவர் கற்பிக்கும் முறை மாண வரை மிகவும் கவர்ந்தது. நண்பகல் இடைவேளையில் அவர் உரையாடல் வகுப்பு ஒன்று நடத்தி வந்தார். இவ் வகுப்பிற்கு அவருடைய மாணவர் மட்டு மின்றி, பிற கல்லூரிகளிலிருந்தும் திர ளான மாணவர் வந்து பயன் பெற்றனர். கணக்கு, பௌதிகம், இரசாயனம் ஆகிய பாடங்களில் எந்தக் கேள்வியைக் கேட் டாலும் கிருஷ்ணன் அவற்றைத் தெளி வாக விளக்குவார்.

பின் அவர் கல்கத்தாவிற்குச் சென்று டாக்டர் ராமனுடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்தார். ராமனுடைய கல்வியின் அகலமும், ஆழமும், தெளிவும் கிருஷ் ணனை மிகவும் கவர்ந்தன. ஒளியியலி லும் (optics) அணுத்திரட் பௌதிகத் திலும் (moleculer physics) அவர் நாட் டம் கொண்டார். அவர் கல்கத்தாவில் இருந்த காலம் (1923—28) மிகவும் முக்கியமானது. ஒளி, குறிப்பாக எக்ஸ் கதிர், அணுத்திரள் அமைப்பால் சிதறு வதைப்பற்றி டாக்டர் ராமன் ஆராய்ச்சி நடத்தி வந்த காலம் அது. இப்பணியில் ராமனுக்குத் துணைபுரிந்த பல இளை ஞருள் டாக்டர் கிருஷ்ணனும் ஒருவர் 1928-இல் பேராசிரியர் ஆர்னல்டு சம்மர் ஃபீல்டு இந்தியாவுக்கு வந்திருந்தார். குவாண்ட்டம் கொள்கையைப் பற்றிக்

கிருஷ்ணன் தயாரித்த உரைகள் அவரைக் கவர்ந்தன.

1929 முதல் 1933 வரை கிருஷ்ணன் டாக்காப் பல்கலைக் கழகத்தில் பௌதிக வாசகராகப் (Reader) பணிபுரிந்தார். இக்காலத்தில்தான் அவர் காந்தப் - படிக வினை (magne-crystallic action) பற்றிய ஆராய்ச்சிக்குரிய பல முறைகளைத் திட்டமிட்டு இயற்றினர்

1933-இல் ராமன் கல்கத்தாவில் உள்ள விஞ்ஞான வளர்ச்சிச் சங்கத்தை விட்டுச் சென்றபின் கிருஷ்ணன் அங்கு பேராசிரியராக நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் அவர் செய்த ஆராய்ச்சிகள் பல. அவை பெரும்பாலும் படிகங்களின் அமைப்பியலையும், அவற்றின் காந்தத் தன்மையையும் பற்றியவை. வான் வ்ளெக் (Van Vleck) போன்ற பிற நாட்டு அறிஞர் படிகங்களின் மின களத்தைப் (electrical fields) பற்றி இயற்றிய ஆராய்ச்சியைத் தொடர்ந்தும் இவர்கள் ஆராய்ச்சி செய்தனர். கரியின் ஒரு வடிவமாகிய ஃகிராஃபைட் படிகத்தில் எலெக்ட்ரான்களின் இயக்கத்தையும், அவற்றின் காந்தத் தன்மையையும் பற்றி இவரும் ஃகாங்குலியும் இயற்றிய ஓர் ஆய்வு குறிப்பிடத்தக்கது.

பௌதிகத் துறையில் அவருடைய தொண்டு உலகப் பெரும் புலவரால் பாராட்டப்பெற்றது. 1937-இல் கேம்பிரிட்ஜில் இருந்த டாக்டர் ருதர்ஃபோர்டும். லண்டனில் இருந்த சர் உவில்லியம் ஃபிராகும் இவரைச் சொற்பொழிவாற்ற அழைத்தனர். பின் கிருஷ்ணன் ஐரோப்பாவிலுள்ள பல இடங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றினர். 1940-இல் அவர் ராயல் சங்கத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1942-இல் அவர் அலகபாத் பல்கலைக் கழகத்தில் பௌதிகப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். ஒருதன்மைத்தான் ஊடங்களில் (homogeneous media) ஒளி சிதறுவதைப் பற்றிய ஐன்ஸ்டைனின் கொள்கையையும் இவர் ஆராய்ந்தார். பூதவியலின் பல துறைகளில் ஆராய்ச்சி செய்ததுடன் கணிதத்திலும் இவர் அரிய ஆராய்ச்சி அறிக்கை எழுதியுள்ளார். சில வரைலலித் தொடர்களையும் (infinite series) அவற்றிற்கு ஒப்பான முழுவனங்களையும் (integrals) பற்றி அவர் எழுதிய அறிக்கை குறிப்பிடத்தக்கது.

1947-இல் கிருஷ்ணன் தேசியப் பௌதிக ஆய்கூடத்திற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். இப்பதவியில் இருந்து நம் நாட்டில் அறிவியல் ஆராய்ச்சி முன்னேறுவதற்கு அவர் பெருந்தொண்டு இயற்றியுள்ளார். நிர்வாகத்தில் அவருடைய பெரும்பாலான நேரம் செலவிடப்பட்ட போதிலும், ஆராய்ச்சியிலும் நேரடியாகத் தொடர்ந்து ஈடுபட்டார். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அவர் பெற்ற விருதுகள் மிகப் பல. நம் நாட்டுத் தேசீயப் பேராசிரியர் என்னும் சிறப்பும் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணனுடைய சிறப்புப் பண்புகள் சிலவற்றைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவோம். அவர் பணிவும், அடக்கமும் உள்ளவர். தம்மை நாடி வருபவர் அனைவருக்கும் உதவி செய்யும் குணமும் உள்ளவர். கல்க்த்தா விஞ்ஞானச் சங்கத்தில், ராமனுடன் ஆராய்ச்சியில் ஈடுபட்ட இளையர் பலர் ஆராய்ச்சித் துறையிலும் ஜெர்மன் மொழியில் உள்ள அறிக்கைகளைப் படிப்பதிலும் கண்ட

இடர்ப்பாடுகளைக் கிருஷ்ணன் தீர்த்து வைத்தார்.

அறிவியல் ஆய்கூடத்தில் மணிக் கணக்காக வேலை செய்தபோதிலும் அவர் வாழ்க்கையின் பல துறைகளையும் அணுகி அனுபவித்தவர். ஆய்கூடத்தி லிருந்து விரைந்து சென்று கால்பந்து ஆட்டம் பார்ப்பதும், வெளியே இருந்து கைதட்டி ஆரவாரம் செய்து ஆடுபவரை ஊக்குவிப்பதும், விளையாட்டைப்பற்றி, அண்டையர் நகைக்க உடனடி விளக்கம் (running commentary) கொடுப்பதும் இவரது பொழுது போக்குகளுள் ஒன்று. டென்னிஸ், பிரிட்ஜ் போன்ற ஆட்டங்களில் இவர் விரும்பிப் பங்கு கொள்வதுண்டு.

கிருஷ்ணன் ஓர் அறிவியல் மேதையாக இருந்ததுடன், தமிழ் இலக்கியத்திலும், தத்துவத்திலும், சமயத்திலும் ஆர்வம் கொண்டவர். ஆழ்ந்த கருத்துக்களைத் தமிழில் எடுத்துக்கூற முடியும் என்னும் கொள்கை உடையவர். ஒரு தடவை சென்னை மாகாணக் கல்லூரியில் ராஜாஜி முதலாகப் பலர் குழுமியிருந்த பேரவையில் தமிழில் அறிவியற் சொற்பொழிவாற்றி கேட்போரை மகிழ்வித்தார்.

அவருடைய கலையில் தெளிவும் கட்டுரை வன்மையும், உவமைநயமும் உறுதிப் பயனும் அவருடைய பேச்சிலும் கட்டுரைகளிலும் வெளிப்படுகின்றன. பூமியின் வயதை வான இயல் முறையில் மட்டும் கணித்த கெல்வின் பிரபு செய்த தவற்றை இவர் காட்டும் முறை குறிப்பிடத்தக்கது.

"கணக்கு முறையிலோ பிழை இல்லை. ஆனால் முடிவோ ஒப்பக்கூடாததாக இருக்கிறது. இப்படி இருந்தால், அந்தக் கணக்கிடுவதற்கு அடிப்படையாய் அமைந்த விஷயங்களில் ஏதோ தவறு இருக்கிறதென்றுதான் அநுமானிக்க வேண்டும். கணிதத்தை மாவரைக்கும் ஓர் இயந்திரத்திற்கு ஒப்பிடலாம். இயந்திரத்தில் இட்ட அரிசியிலிருந்து அரிசிமாவும், கேழ்வரகிலிருந்து கேழ்வரகு மாவும் வெளிவருவது போலவே, கணக்கின் வழியாக உண்மையான மூலப்பொருளிலிருந்து உண்மையான முடிவும், தவறான மூலப் பொருளிலிருந்து தவறான முடிவும் சித்திக்கும். இது தான் ஹக்ஸ்லியின் வழக்கு......"

ஐன்ஸ்டைனின் கொள்கையைப் பற்றி அவர் ஒரு தடவை வானொலியில் பேசியபோது, "நான் இங்கே பேசுவது வேதாந்தம் அல்ல, கலப்பில்லாத பௌதிகம்; உரைகல்லில், மாற்றுப் பரீட்சையில் தேறின சுத்தப் பௌதிகம். வேதாந்தம்போல உங்களுக்குத் தோன்றினால் மெய்ஞ்ஞானத்துக்கும். விஞ்ஞானத்துக்கும் உள்ள தொடர்பை அது காட்டுமேயொழிய நான் பேச வந்த விஷயத்தின் விஞ்ஞானத் தன்மை அதனால் குறைவுபடாது" என்று முகவுரையாகக் கூறினார்.

இப்பெரியாரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா 1958-இல் நிறைவேறியது. இன்று அவர் நம்முடன் இல்லாதது நமக்கு ஒரு பெரும் இழப்பாகும். அவர் இயற்றிய அறிவியல் அறிக்கைகளுடன் அவரது விஞ்ஞானத் தமிழ்த் தத்துவ இணைப்பும் பரந்த மனப்பான்மையும் இன்றைக்கு அவர் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் செல்வங்களாகும்.

எகோ (ECHO)

(EDUCATION ECHO) 1965 ஏப்ரல் வெளியீடு

WCOTP-ப் பின் பேரவை காரணமாக நிகழவிருக்கும் பிரத்தியேக கூட்டங்கள்

அடிஸ் அபாபா (Addis Ababa) நகரத்தில் நடக்க விருக்கும் WCOTPப்பின் பதினன்காவது பிரதிநிதிகளின் பேரவையின் கண் நிழவிருக்கும் உறுப்பினர் கூட்டத்தில் வாழ்க்கைத் துறைக் கல்விக்கும், தொழிற்றுறைக் கல்விக்குமான அதிகப்படியான தேவை முதலிடம் பெறும். "கல்வியின் மூலம் சம வாய்ப்பு" என்ற நோக்கத்தைக் கொண்ட இந்த பேரவை ஜூலை 31-ம் தேதி முதல் ஆகஸ்டு 7-ம் தேதி வரை நடைபெறும். இக் கூட்டத்தின் தற்காலிக நிகழ்ச்சிநிரல் தனியாக வேறு இடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

'Role of teachers Associations in literaty Education" என்ற பொருள் பற்றி ஒரு பிரத்யேகக் கூட்டம் ஆகஸ்டு 6-ம் தேதி நடைபெறும். இதைத் தொடர்ந்து "முதியோர் கல்வி"யைப்பற்றி இரண்டு நாட்கள் (ஆகஸ்டு 8, 9 தேதிகளில்) கூட்டம் நடக்கும்.

'கல்வியின் மூலம் அறியாமையைப் போக்க வேண்டும்' என்ற யுனேஸ்கோவின் அறிவிப்பைப் பற்றிய முழு பகுதியும் தனியாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஆகஸ்டு 5-ம் தேதி கூடவிருக்கும் WCOTPப் பின் International member ஆன The International Reading Association, கூட்டத்தின் பெருவாரியான நேரத்தை ஏற்கனவேயே கல்வித்துறையில் அடைந்த வளர்ச்சியை நிரந்தரமாக்கச் செய்யவும், வாசித்தல் முறையைத் துரிதப்படுத்தவும் பயன்படுத்தும். அதே நாளில் நடக்க விருக்கும் Technical and Vocational Education கருத்தரங்கில் வேலை கொடுப்பவரின் தேவையும், சமூகத்தின் தேவையும், தொழில் துறை வாழ்க்கைத் துறை கல்வி ஸ்தாபனத்தில் தனி நபரின் உரிமையும் பற்றிய கேள்விக்கான விடைகளின் இணைப்பு முக்கிய இடம் பெறும்.

WCOTPப் பின் வாழ்க்கைத் துறை, தொழில் துறை கல்விக்கான பிரத்யேக ஸ்தாபனத்தின் காரியதரிசியான Edward Britton என்பவரால் இந்த இணைப்பின் பதில்கள் தயார் செய்யப்படுகின்றன. இந்தக் கருத்தரங்கு வாழ்க்கைத் துறை, தொழில் துறை பற்றி போதிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதைப் பற்றியும் பரிசீலிக்கும். கேள்வி, பார்வை மூலம் கல்விக்கான குழு ஆகஸ்டு முதல் தேதி "Using Radio and Television to Equalize Educational Opportunitiess" என்ற பொருள் பற்றி ஒருநாள் கருத்தரங்கைக் கூட்டும்.

1966-ல் நடக்கவிருக்கும் பேரவைக்கு முன்னால் 26 – 29 July தேதிகளில் நான்கு நாட்களுக்கு கேள்வி, பார்வை (Audio Visual Instruction) முதலியவை பற்றி கம்பாலா (Kampala) என்ற இடத்திலுள்ள Makerere's சர்வகலாசாலையில் நடைபெறும்.

WCOTPப்பின் பிரத்தியேக ஸ்தாபனமும் யுகாண்டா நாட்டு ஆசிரியக் குழுவும் Makerere கல்விச்சாலையும் சேர்ந்து இந்த தொழிற்சாலையை உருவாக்கும்.

Nominatiens for Russel Award

பனமா, பெர்முடா, நார்வே, ஸ்விட்ஜர்லாந்து நாட்டு ஆசிரியர் சங்கங்கள் 1965 வில்லியம் F. ரஸ்ஸல் Award பெறுவதற்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த வெகுமதியைப் பெறுபவர்களுக்கு எதியோப்பியாவில் அடிஸ் அபாபா WCOTP Delegate assemblyக்குச் செல்வதற்கான வசதியைத் தருகின்றன. சீட்டுக்குலுக்கல் மூலம் கீழ்க்கண்ட சங்கங்கள் முறைப்படி மேற்கூறிய Award க்கு ஆசிரியரைச் சிபாரிசு செய்ய தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

ஒவ்வொரு சங்கமும் தங்கள் சிபாரிசை தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர், கல்வித் துறையில் ஆற்றும் தொண்டைப்பற்றிய தகவல்களைக் கொடுக்குமாறு கோரப்பட்டுள்ளன. வெற்றிபெறும் ஆசிரியர்களை WOCTP Executive Committee மேற் கூறிய தகவல்களை ஆதாரமாகக் கொண்டு தேர்ந்தெடுக்கும்.

The Uganda Educators who Selected the Organization to Presedt nominees for william F. Russel Award

மேற் கூறிய சங்கங்கள் செகரிடேரியட்டில் நடந்த ஒரு விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்டன. உகாந்தா ஆசிரியர்கள் சங்க நிர்வாகக் குழுவினைச் சேர்ந்த

மூன்று ஆசிரியர்கள் மேற்கூறிய தேர்வை நடத்தினர். அவர்கள் கொலம்பியா சர்வகலாசாலையில் ஆசிரியர்கள் கல்லூரியில் பயிற்சி பெற வந்தவர்கள் ஆவர்.

William F. Russel Award என்பது WOTP யின் தலைவரான Dr. ரஸ்ஸல் என்பவரின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டது. டாக்டர் ரஸ்ஸல் இடைவிடாமல் WOTP, IFTA, FIPESO இவற்றின் கூட்டு அமைப்பிற்குப் பாடுபட்டு வந்தார். அதன் விளைவாக 1952 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் Russel Award கொடுக்கப்பட்டு வருகிறது.

ஆசியா (Asia)

1965 ஜனவரியில் சைனாவில் Taiwan Narmal University பரஸ்பர என்ற இடத்தில் நடந்த கல்விச் சங்கங்களின் கூட்டத்தில் உலக மக்களின் மனப்பான்மையை ஐக்ய நாட்டுச் சங்கத்தைப் பற்றி போதிப்பதன் மூலம் வளர்ப்பதற்கான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இணைப்புக் கூட்டத்தில் சைனாவின் கல்விச் சங்கத்தின் தலைவரான Dr. Pai-lin Tiem தலைமையில் கூடிய தூது கோஷ்டியினர் சைனாவில் கல்வி வளர்ச்சி 1964-ல் WCOTPப் பின் தீர்மானத்தின்படி U. N. O. வைப் பற்றிய போதனைமுறை மூலம் பரஸ்பரம் உலக நாடுகளின் மனப்பான்மையைத் தெரிந்து கொள்ளும் வகையில் அமையவேண்டும் என்ற தீர்மானத்துக்கு வாக்களித்தார்கள்.



இங்கே பிரசுரித்திருக்கின்ற இரண்டு படங்களில் ஒன்று Dr. Pai-lin tien கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்துவதையும், மற்றொன்று விவாதக் குழுவின் ஒரு பகுதியையும் குறிக்கின்றன. குடியரசு சைனாவின் கல்வி மந்திரியாக நியமிக்கப் பட்டவர் Dr. Yen chen- Hsing என்ற Taiwan Provincialcheng Kung Universityன் தலைவரும் அருகாமையில் நடந்த WCOTPப் பின் Asian Regional meeting of Experts and Specialists கூட்டத்திற்குப் பிரதிநிதியாகவும் அனுப்பப் பெற்றவருமாவர்.

ஆஸ்திரேலிய நாட்டின் ஆசிரிய சம்மேளனத்தின் சார்பில் ஆறு பிரதேசங்களைச் சுற்றுப் பிரயாணப் செய்ய WOCTPப் பின் உபதலைவரான ஸ்ரீ S. நடராஜனுக்கு அழைப்பு விடப்பட்டிருக்கிறது. இவர் பிரிஸ்பேன், குவின்ஸ் லாண்ட் ஸிட்னி, நியூ சவுத் வேல்ஸ், லான்ஸ்டன் பிஸ்மேனியா, மெல்போர்ன் அடிலெய்ட், விக்டோரியா, வடக்கு ஆஸ்திரேலியா முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்வார். இவர் நியூஜிலண்ட் கல்விக் கூடத்திற்கும் விஜயம் செய்வார்.

ஆஸ்திரேலியா ஆசிரியச் சங்கங்கள் WOCTPப் பின் அத்யாவசியத்தைத் தெரிந்து கொள்ளவும் W. CTPப் பிற்கும் A. T. F. க்கும் உள்ள உறவை வளர்ப்பதற்குமே இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. ஐக்கிய நாட்டுக் கழகத்தின் டெப்டி ஸெகரட்ரி ஜெனரலான (WFUNA) L. H. Horce Perera என்பவர் ஐக்கிய நாட்டைச் சார்ந்த ஜப்பானிலுள்ள சங்கங்களிடமும் WCOTP ஸ்தாபனத்தின் ஜப்பான் நாட்டு இரண்டு பிரதிநிதிகளிடமும் ஜப்பான் நாட்டு ஆசிரியச் சங்கங்களிடமும் மற்றும் ஜப்பான் நாட்டுக் கல்விச் சங்கங்களிடமும் அகில உலக மனத் தெளிவைப் பற்றி கலந்து ஆராய்ந்தார். அவர் உலக நாடுகளிடை ஒரு மனத் தெளிவை அதிகரிக்கச் செய்ய ஏக்கிய நாட்டுச் சங்கங்களும், ஆசிரியச் சங்கங்களும் நெருங்கிய முறையில் செயல்பட வேண்டு மென்பதை வலியுறுத்தினர்.

WCOTPப் பின் பிரதிநிதிகளின் சபை பாரீஸ் நாட்டில் நடந்த பொழுது WCOTPம் WFUAம் நெருங்கி செயல்பட வேண்டிய அவசியத்தைப் பற்றி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர்.

பாகிஸ்தான் அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையிலிருந்து அது முன்னை விட மும்மடங்கு கல்விக்காக செலவிட விருக்கின்றதென்பது தெரியவருகிறது. அந்தத் திட்டத்தில் 15000 புதிய ஆரம்பப்பள்ளிகளை உண்டாக்கிவும் மேலும் 8600 பழைய பள்ளிகளை புதுப்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைய வரையில் 7200 புதிய பள்ளிகளை உண்டாக்கியும், 3530 பள்ளிகளைச் செப்பனிட்டும் இருக்கிறது. இதன் காரணமாக பள்ளியில் பிள்ளைகளின் எண்ணிக்கை 690000 ஆக-அதாவது 28 சத விகிதம் கூடுதலாகி யுள்ளது.

Indian Council for cultural Relationsன் அறிக்கையின்படி அயல் நாட்டுப் பிள்ளைகள் இந்தியாவில் வந்து கல்வி கற்கின்ற எண்ணிக்கை கூடுதலடைந்து கொண்டே வருகின்றது என்பது தெரிய வருகிறது. இப்பொழுது அப்படிப்பட்ட அயல் நாட்டினின்றும் வந்திருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 5000 இப்படி அயல் நாடுகளிலிருந்து வரும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் ஆசியாவிலிருந்தும் ஆப்ரிக்காவிலிருந்தும் வருபவர்கள். இவர்கள் பம்பாய், டில்லி மதருஸ் முதலிய இடங்களிலுள்ள கல்லூரிகளில் இடம் பெற்றிருக்கிருர்கள்.



(இங்கு காணும் கட்டிடம்
அந்த சங்கத்தின் 25-வது ஆண்டு விழாவின் போது திறந்து வைக்கப்பட்டது.

அரபு நாடுகள் (Arob Stats)

கல்வி சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளிலும், முக்கியமாகக் கைத்தொழிற் கல்வித் துறையில் அபிவிருத்தி காண 'சிரியர்' நாட்டின் கல்வி இலாகா ஒரு ஐந்தாண்டு திட்டத்தை ஆரம்பித்திருக்கிறது. 90 சத விகிதப் பிள்ளைகளை ஆரம்பக் கல்வியில் அனுமதிப்பதே இதனுடைய நோக்கம். 1965-ல் இது 113,300 பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி அளிக்கும். ஆரம்பக் கல்வியை முடித்த பிள்ளைகளில் 45% நடுத்தரக் கல்வி போதிக்கப்படுவார்கள். இந்த ஆண்டு 29,000 மாணவ, மாணவியர் இதில் அனுமதிக்கப்படுவார்கள்.

12 வகுப்புக்கள் கொண்ட தொடக்கப்பள்ளியை ஒவ்வொரு ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்கும் இணைந்து ஒரு மாதிரி திட்டத்தை (EXPERIMENTAL) ஈஜிப்த் நாட்டு கல்வி இலாகா ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் ஆசிரியப் பயிற்சி பெறுவோர்களுக்கு தற்கால முறையில் நன்கு தேர்ச்சி பெற ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தி யிருக்கிறது.

The Arab literacy Confernce. ஒரு திட்டத்தை உருவாக்கி அதன் மூலம் 1965 நவம்பரிலிருந்து தொடங்கி 50 மில்லியன் அரபுக் குடி மக்களை அறிமையினின்றும் விடுவிக்க ஏற்பாடு செய்திருக்கிறது.

10 வருடங்களில் அரபு நாடு ஒவ்வொன்றிலும் கல்வியின்மையை ஒழிக்க திட்டம் வகுக்கவும் சிபாரிசு செய்திருக்கிறது. பாலஸ்தீனத்தில் கல்வியின்மையைப் போக்க UNESCO, Arab Organaization for Education, Culture and serviccs, UNRWA மற்றும் உலக குழுக்களினுடைய ஒத்துழைப்புக்குண்டானரு முக்கியத்துவத்தை வலியுறுத்திற்று.

ஆசிரியர்களுக்கு வீட்டு வசதிக்கான பொருளை அளிப்பதற்கு "கடன் நிதி"யை சிரியா, அரபுக் குடியரசு ஆரம்பித்திருக்கிறது. இதன்படி ஆசிரியர்களுக்கு வட்டியின்றி தவணையில் கடன் கொடுக்கப்படும்

கல்வித்திட்டத்தை வகுக்கத் திறமை வாய்ந்த பல நிபுணர்களால் வழங்கிய கட்டுரைகள் அடங்கிய 320 பக்கங்கள் கொண்ட "Economic and Social Aspects of Educational Planning" என்ற புத்தகம் Unescoவால் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகம் ஸ்பெயின், பிரஞ்சு மொழிகளில் கிடைக்கும்.

Second world freedom from hunger Campaign week and the young world Mobligation Appeal of the food and Agriculture Organization இவற்றுக்கான திட்டங்கள் FFHC அட்வைஸரி கமிட்டியின் ஏழாவது கூட்டத்தில் உருவாக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் WCOTPப்பின் பிரதிநிதியாக பாரீஸ் அலுவலகத்தைச் சேர்ந்த Miss Elizabeth Boucherant என்பவர் கலந்து கொண்டார்.

1965-ம் வருடம் அக்டோபர் மாதம் 16-24 தேதிகளில் நடக்கவிருக்கும் இரண்டாவது உலக FFHC வாரம் உணவு விவசாய ஸ்தாபனத்தின் Young world Appealன் ஆரம்பத்தைக் குறிக்கும். இந்த நடவடிக்கை 1966 மார்ச்சு மாதம் வரை நீடிப்பதோடல்லால் உலகத்தில் இதனுடைய முக்கியத்வத்தின் பயனை நிலைநிறுத்தவும் இந்தச் செயலில் பல இளைஞர்களை ஈடுபடுத்தவும் மேற்கொள்ளப்படும்.

ஜெனீவா நாட்டில் நடந்த கூட்டத்திற்கு வருகை தந்தவர்கள் உலகப் பசிப் பிணியைப் போக்கக்கூடிய வழிகள் முதலிய சிபாரிசுகளைப் பரிசீலனை செய்தார்கள். இதன் காரணமாகப் பள்ளிக்கூட உபயோகத்திற்கும், மற்றும் இதர ஸ்தாபனத்திற்காகவும் தேவையான திட்டங்களை யூனேஸ்கோவும் Freedom from Hunger Campaign Co-ordinators ஆபீசும் சேர்ந்து தயார் செய்கின்றன. இந்தத் திட்டங்களின் முதல் பாகம் 1965 முதற்பாதியில் கிடைக்கும்படி செய்யப்படும்.

கொரிய நாட்டு ஆரம்ப உயல்நிலைப்பள்ளிகளிலுள்ள 35 ஆசிரியர்களைக் கொண்ட கூட்டம் ஜப்பான் நாட்டில் டோகியோ, க்யோடோ, ஒஸாகா, ஹுரேஷிமா நாரா முதலிய நகரங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள கல்வி நிபுணர்களைச் சந்தித்தும், பள்ளிகளுக்கு விஜயமும் செய்தார்கள்.

இந்தக் கூட்டம் முதன் முதலாக Korean Federation of Education Asssociationஞல் அதன் தலைவரான Jae Bok Lee என்பவருடைய தலைமையில் அனுப்பப் பட்டது.

U. S. S. Rன் Education Scientific workers Union என்ற ஸ்தாபனத்தைச் சேர்ந்த மூன்று நபர்கள் New South wales and the New Zealand Education instituteக்கும் செப்டம்பர் மாதத்தில் விஜயம் செய்தார்கள். அதே போன்று கென்யா (Kenya) தேசீய ஆசிரியர்களின் யூனியனைச் சேர்ந்த மூன்று நபர்கள் U. S. S. B.ஐயும் கிழக்கு ஜெர்மனியையும் கண்டு அறிய செப்டம்பரில் விஜயம் செய்தார்கள். டிசம்பரில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஆசிரியர்களுடைய கூட்டம் U.S.S.R.க்கும் செக்கோஸ்லேவியாவுக்கும் (Czechoslovakia) விஜயம் செய்தார்கள்.

அகில நாட்டுக்கான வேண்டுகோள்

An Appeal to the Nations

முன்னேற்றப் பாதையில் அறியாமையை ஒழித்தல்

உலகத்தில் தற்போது இருக்கும் 700 மில்லியன் எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் அந்த நாடுகளின் முன்னேற்றத்திற்கு ஒரு தடையாக இருந்து வருகிறார்கள். ஒரு நாட்டில் எந்தவித முன்னேற்றம் உண்டாலுைம் அந்த நாட்டில் படிப்பறியாத மக்கள் இருக்கும் வரையிலும் அது ஒளிவிட்டுப் பிரகாசிக்காது. உலகத்தில் கல்வி கற்பிப்பதற்கான அடிப்படையான தேவைகள் இல்லாததின் காரணமாக பாதி பங்கு முதியோர்கள் இன்றைய விஞ்ஞான வளர்ச்சியையும், கைத்தொழிலபிவிருத்தியையும் அறிவுப் பாதையில் முன்னேற்றத்தையும் அறிய முடியாது சமுதாயத்தில் ஒரு ஒதுக்கப்பட்ட வகுப்பினர்களாய்த் தங்களுடைய சொந்த வாழ்க்கைப் பாதையினின்றும் விலகி நாட்டின் முன்னேற்றத்திற்கான விருப்பத்திலும் பங்கு கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர்.

முன்னேற்றத்தின் அடிப்படையான தத்துவம் மனித வர்க்கத்தின் உற்பத்தியை அதிகரிக்கும் சக்தியையும் செயலாற்றலையும் வெளிவிடுவதே. அறியாமையினல் ஏற்படக்கூடிய சகிப்புத் தன்மையின்மையும், அவநம்பிக்கையும், பயமும் மக்களிடம் இருக்கின்ற வரையில் இந்தத் திட்டம் பயனளிக்காது. இந்த அறியாமையை ஒழிக்கும் பணி முன்னேற்றப் பாதையில் நடைபோடும் நாடுகளுக்கேயன்றி உலகத்தில் எல்லா நாடுகளிலும் ஒரு முக்கியமான காரியமாகும்.

கல்வி போதிப்பதோடு மட்டும் நின்றுவிடக் கூடாது. கல்வி கற்றல் என்பது கல்வியை மேன்மேலும் விருத்தி செய்ய ஒரு கருவியாகக் கொண்டு தன்னைத்தானே முன்னேற்ற மடையச் செய்து கொள்ளும் ஒரு சாதனமாகும். தன்னைத் தானே முன்னேற்ற மடையச்செய்து கொள்ள காரண

மாகவும் வழியாகவும் இருப்பதோடல்லாமல் புதுமாதிரியான, திறமையையும், எண்ணத்தையும் துரிதமாக மாறிக்கொண்டு வரும் சூழ்நிலைக்குத் தக்கவாறு மாற்றிக் கொள்ளவும் வழி செய்கிறது. ஆகையினால் துரிதமாக முன்னேறிக்கொண்டு வரும் வகையில் சமூக, பொருளாதாரத் துறைகளில் அதிவிரைவில் ஒரு மாறுபட்ட சூழ்நிலையை உண்டாக்கவும் முக்கிய காரணமாகவும் உள்ளது. எழுதப்படிக்கவும் முதியோர் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான திட்டத்தில் ஒரு முக்கியமான திட்டமானாலும் மனித சமுதாயத்தில அறிவாளி வர்க்கத்தை அதிகரிக்கக் கூடிய திட்டமாகும். பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு சாதாரணக் கல்வி என்பது ஒரு அடிப்படைத் தேவையாகும், தன்னைத்தானே வலிவடையச் செய்யும் பொருளாதார வளர்ச்சிக்கு பெருவாரியான மக்களின் அறியாமையைப் போக்கி கல்வி புகட்டுவதென்பது நாட்டு வளர்ச்சிக்கான திட்டத்தில் முக்கிய அம்சமாகும். அறியாமையைப் போக்குவதற்கு எவ்வளவு உழைப்பு தேவைப்படுகிறது அவ்வளவு விரைவும் தேவை.

இந்த உடலுழைப்புக்கு அறியாமை அதிகமான உள்ள மெம்பர் ராஜ்ஜியங்களுடைய பெரும் பொறுப்புதான் அதிகம். அவைகள் தங்கள் நாட்டிலுள்ள வருவாயையும், மனித சக்திகளையும் ஒன்று திரட்டி நாட்டு அளவிலும், மாநில ரீதியிலும் உறுதிப்பாடும், பயன் விளைவிக்கத்தக்கதுமான வேலையைச் செய்யும் உதவியைச் செய்யவேண்டும். இப்படிப்பட்ட இக்கட்டான பொறுப்பிற்கு பலதரப்பட்ட வகையிலும் சம தொடர்புள்ள வகையிலும் தேவைப்படுகின்ற உதவிகளை அகில தேச ரீதியில் உதவி, அவற்றை முழுமையாகப் பலனளிக்கும் வகையில் ஒருமைப்பாட்டுடன் திட்டம் வகுத்துச் செயல் படுத்த வேண்டும்.

மனித சமுதாயத்தின் பரஸ்பர உதவியை மதித்துப் பொதுக் குழுக் கூட்டத்தின் மூலம் யுனேஸ்கோ ஸ்தாபனமானது மெம்பர் ராஜ்ஜியங்களையும், அதிலுள்ள மக்களையும், சமூக, கலாசார அரசியல் ஸ்தாபனங்களையும் தொழிற் சங்கங்களையும், பிரத்யேக சங்கங்களையும் யாவருக்கும் நல்லெண்ணத்தையே விரும்பும் ஆண் பெண் எல்லோரையும் அறியாமை என்ற நோயைத் துரித காலத்தில் சமுதாயத்தினின்றும் அகற்றி மனித சமுதாய வளர்ச்சி யொன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதற்கு ஆவன செய்ய வழி கோருகிறது.

ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் மூலம் வேலை செய்தல்

United Nations தன்னுடைய குறிக்கோளை எவ்வாறு நிறைவேற்றுகிறது?

இந்தக் கேள்வியை "Working to gether the United nations way' என்ற வெளியீட்டின் முகவுரையில் கேட்கப்படுகிறது. இந்த 58 பக்கங்களைக் கொண்ட வெளியீடு ஐக்கிய நாடுகளின் பல்வேறு வேலைகளை விவரிக்கின்றது. அவை, சமாதானத்தை நிலை நாட்டல், மனித உரிமையைப் பாதுகாத்தல், உலக ரீதியில் ஒவ்வொரு நாட்டின் கடமை பொருளாதார சமூக முன்னேற்றம், மக்கள் சமுதாயத்தின் குரலுக்கு முக்கியத்துவம் முதலியன வாகும்.

Marion Bijur என்பவரால் எழுதப்பட்டு Jean Picker என்பவரால் பதிப்பிக்கப்பட்ட இந்தப் புத்தகம் Interchang Foundation in Ccoperation with the UN office of Public of information என்ற ஸ்தாபனத்தாரால் வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகம் 50 Cents க்கு U. N விற்பனை அலுவலகத்தில் எங்கும் கிடைக்கும் கடிதப் போக்குவரத்தின் மூலம் வேறு ராஜ்ஜியங்களிலுள்ள ஆசிரிய மாணவர்களுடன் உலக ரீதியில் ஒருவரை யொருவர் புரிந்துகொண்டு செயல்படுவதற்கான ஒரு திட்டத்தை World Pen Pal என்ற ஸ்தாபனம் அறிவித்திருக்கின்றது. தொண்டு மனப்பான்மையையுடைய ஸ்தாபனம் 1950ல் ஆரம்பிக்கப்பட்டது. 1964-ல் 58,500 மாணவர்களும், ஆசிரியர்களும் 125 தேசங்களிலிருந்து இந்த ஸ்தாபனத்தினுடைய நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். இந்த ஸ்தாபனத்தினுடைய அலுவலகம் ஐக்ய அமெரிக்காவில் Mimesota சர்வகலாசாலையில் இருக்கிறது.

ஐக்கிய அமெரிக்காவிலிருக்கும் ஆசிரியருக்கும் மற்றும் வேறு நாட்டிலிருக்கும் ஆசிரியருக்கும் பரஸ்பர இணைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் கலையை வளர்க்கக் கூடிய எண்ணங்களையும், அயல் நாட்டுக் கல்வி முறைகளின் நோக்கங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பையும் உண்டாக்க ஒரு தனிப்பட்ட திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் 65-க்கும் மேலான நாடுகள் கலந்து கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ள ஆசிரியர் தன்னுடைய பெயர், விலாசம், வயது, பாலினம் ஆசிரியத் தொழிலின் நிலை, அவர் போதிக்கும் பாடம் முதலியவை Mrs. R. E. Kossow, Chairman, Teacher-to the teacher Program, world Pen Pals, world Affairs Center, University of Minnesota, Minneapolis. Minnesota 55455 U. S. A. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அந்தக் கடிதம் ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஷ் ஜெர்மன் மொழிகளில் அமைந்திருத்தல் வேண்டும்.

THE SOUTH INDIA TEACHERS' UNION

ANNUAL GENERAL BODY MEETING

Notice

A meeting of the General Body of the South India Teachers' Union will be held at 8 a.m. on Friday the 4th June 1965 in the Dr. Alagappa Chettiar College campus, Alagappapuram, Karaikudi-3. Members are cordially invited to attend the meeting.

Agenda:

1. Minutes of the last General Body Meeting.
2. Consideration and adoption of the Annual Report of the Union for the year 1964-65 and audited statements of accounts for the years 1963-64 and 1964-65.
3. Consideration of amendments to rules of the Union.
4. Election of Office-bearers for the year 1965-66.
5. Any other business brought forward by the Executive Board of the S. I. T. U.

A. K. Sitaraman
President.

T. S. Rajagopalan
Secretary.

V. S. Saravanan
H. Rajamanickam
Joint Secretaries.